

விழுப்புரம் மற்றும் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக முகவர்கள் கூட்டம் மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு பாக முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் மற்றும் வெற்றிக்கான மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். தலைமைக் கழக தொகுதி பார்வையாளர்கள் துரை கி.சரவணன் (விழுப்புரம்), சிவ.ஜெயராஜ் (விக்கிரவாண்டி) சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, இரா.இலட்சுமணன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் தயா.இளந்திரையன், இரா.கற்பகம், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி உள்ளிட்ட பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற செவி திறன் குறையுடையோர் அரசு மேல் நிலைப் பள்ளியின் 50 வது ஆண்டு நிறைவு பொன் விழாவில் கலந்து கொண்டு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பொன் விழா மலரை வெளியிட்டு,மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே. மணி,வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,நகர்மன்ற தலைவர் லட்சுமி மாது,கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் – அரிமளம் ஊராட்சியில் பள்ளிக் கல்வித்துறை சார்பில்

# 666 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்!

புதுக்கோட்டை, அக்.19 -

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 666 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ்.ரகுபதி 14.10.2024 அன்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு சிறப்பான கல்வித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மாணவ, மாணவிகள் பள்ளிக்கு உரிய நேரத்திற்குள் சென்று வரும் வகையில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 666 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

அரிமளம் ஊராட்சி ஒன்றியம், அரிமளம் மேல்நிலைப்பள்ளியில் 108 மாணவர்களுக்கும், 74 மாணவிகளுக்கும், ராமச்சந்திரபுரம் உலகப்பர் மேல்நிலைப்பள்ளியில் 64 மாணவர்களுக்கும், 95 மாணவிகளுக்கும், தாஞ்சூர் மேல்நிலைப்பள்ளியில் 25 மாணவர்களுக்கும், 27 மாணவிகளுக்கும், அரிமளம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 80 மாணவிகளுக்கும், கீழா நிலைக்கோட்டை அரசு மேல் நிலைப்பள்ளியில் 25 மாணவர்களுக்கும், 33 மாணவிகளுக்கும், ஏம்பல் மேல்நிலைப்பள்ளியில் 28 மாணவர்களுக்கும், 25 மாணவிகளுக்கும், கழனிவாசல் மேல் நிலைப்பள்ளியில் 26 மாணவர்களுக்கும், 56 மாணவிகளுக்கும், என ஆகமொத்தம் 666 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

தமிழக அரசின் மூலம் வழங்கப்பட்டுள்ள இந்த மிதிவண்டிகளை மாணவ, மாணவிகள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, அரிமளம் பேரூராட்சித் தலைவர் மாரிக்கண்ணு, முத்துக்குமார், அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் (பொ) க.ஜெயந்தி, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம் மற்றும் வி.ஆர். இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### பூண்டி கே.கலைவாணன் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

# மன்னார்குடியில் மாபெரும் கழகப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – இள.புகழேந்தி சிறப்புரை!

திருவாரூர், அக்.19-

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் நகர தி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் அமைச்சர் சுயமரியாதை சுடர், மன்னை ப.நாராயணசாமி அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பு பொதுக்கூட்டம் இன்று (19.10.2024 - சனிக்கிழமை) மாலை நடைபெற இருக்கிறது.

கழக மூத்த முன்னோடியும், முன்னாள் அமைச்சருமான சுயமரியாதை சுடர், மன்னை என்று அன்போடு அழைக்கப்படும் மன்னை. ப.நாராயணசாமி அவர்களின் 105வது பிறந்த நாளை முன்னிட்டு, மன்னார்குடி நகர கழகம் சார்பில், நகரச் செயலாளர் வீரா.கணேசன் ஏற்பாட்டில் மாபெரும் சிறப்புப்பொதுக்கூட்டம் இன்று (19.10.2024-சனிக்கிழமை) மாலை பந்தலடியில் நடைபெறுகிறது.

மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும் இந்த பொதுக்கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜாவும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் வழக்கறிஞர் கடலூர் இள.புகழேந்தியும் பங்கேற்று சிறப்புரையாற்ற இருக்கின்றனர். நகர் மன்ற தலைவர் வரவேற்புரையாற்றுகிறார்.

தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாநில விவசாய அணி செயலாளரும் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன், கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, தலைமைச்செயற்குழு உறுப்பினர் சு.ஞானசேகரன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ், தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ராஜா.சீனிவாசன், ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ்செல்வன்,பொதுக்குழு உறுப்பினர் ராஜபூபாலன், நகர துணைச் செயலாளர் அ.சுப்பையா, முன்னாள் நகர்மன்ற தலைவர் கார்த்திகா உத்தமன், அவைத்தலைவர் த.முருகையன், மாவட்டப் பிரதிநிதி மு.மணிமாறன், அறங்காவல்குழு தலைவர் சி.இளவரசன், நகர்மன்ற துணைத்தலைவர் ஆர். கைலாசம், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் சோம. இளங்கோவன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்கின்றனர்.

நகரச் செயலாளர் வீரா கணேசன் நன்றி கூறுகிறார்.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு கிளைக்கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளாக பங்கேற்கின்றனர்.


